உ

விநாயகர் அகவல்

3-2



தமிழ் நாடு தெய்விகப் பேரவை
நெ. 9, மகாராஜா சூர்யராவ் ரோடு,
சென்னை-18.
1972.

முதல் பதிப்பு 1968. 10,000 படிகள்
2-ம் பதிப்பு 1970, 10,000 படிகள்
3-ம் பதிப்பு 1972. 10,000 படிகள்

மாநிலக்குழு உறுப்பினர்கள் :

1. திருவருள் திரு. அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
(திருவாவடுதுறை ஆதீனம்)

2. ,, சண்முக தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(தருமபுரம் ஆதீனம்)

3. ,, ஜகத்குரு. சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்
(காஞ்சி காமகோடி பீடம்)

4. ஆதீனகர்த்தர், ஸ்ரீ திருக்குறுங்குடி மடம்

5. திருவருள்திரு. சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள்
(திருஞானசம்பந்தர் மடம், மதுரை)

6. ,, காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
(திருப்பனந்தாள் காசிமடம்)

7. ,, ஆதீனகர்த்தர், வியாசராய மடம்.

8. ,, ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்.
(காஞ்சி ஞானப்பிரகாச சுவாமிகள் மடம்)

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களின் உதவியைக் கொண்டு தமிழ்நாடு தெய்விகப் பேரவை அச்சகம் ஒன்று ஆரம்பித்துள்ளது. இவ்வச்சகத்தில் உருவாக்கிய முதல் புத்தகம் இவ் விநாயகர் அகவலாகும். இவ்வகவலை விநாயகப் பெருமானின் பொற்பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

முன்னுரை

இந்து சமய மக்கள் தங்களுடைய சமயத்தின் பெருமையை உணர்ந்து செயல்படவும், தங்கள் சமயப்பற்றை மேன்மேலும் உறுதிப் படுத்திக் கொள்ளவும், இந்து சமய அற அருள் நெறியையும், நல்லொழுக்கங்களையும் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழவும் துணைபுரிவதற்கு ஏற்ற சமயப் பணிகளையாற்ற, தமிழகத் திருமடங்களின் மகா சந்நிதானங்களை உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சார்பில், அரிய இனிய துதி நூல்களுள் ஒன்ருன இவ் " விநாயகர் அகவலை " வெளியிடுவதில் பெருமை அடைகிருேம். பேரவையின் நான்காவது இலவச வெளியீடான இது, மூன்ரும் பதிப்பாக வெளி வருகிறது.

மேலும், கிராமங்களிலும், பெரிய நகரங்களின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்கெனவே சமயப் பணியாற்றிவரும் வழிபாட்டு மன்றங்களையும், இனிப் புதிதாக ஏற்படுத்தப்பெறும் மன்றங்களையும் பேரவையின் கிளைகளாக இணைத்துக் கொள்ள விரும்புவோர் தமிழ்நாடு தெய்விகப் பேரயையின் செயலாளருக்கு விபரங்களுடன் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுகிருேம்.

சென்னை-18,
10—3—72.

அ. நாராயணசுவாமி,
செயலாளர்.

விநாயகர் அகவல்

—:0:—

விநாயகர் காட்சிக்கு எளியவர்: தன்னை வணங்கும் அடியவர்களுக்கு எளிதாகவும் விரைவாகவும் அருள் வழங்கும் இயல்பினர். நம் இந்திய நாட்டிலும், இந்து மதத்திலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் தெய்வங்களுள், விநாயகர் சிறப்பாகக்குறிப்பிடத் தக்கவர்.

"தனது அடி வழிபடும்
அவர் இடர் கடி கணபதி"

எனத் திருஞானசம்பந்தர் விநாயகரைப் புகழ்ந்து போற்றித் துதித்துள்ளார். அதனால் அடியவர்களின் இடர்களைக் களைந்து இன்பம் அளிப்பதில், விநாயகர் இணையற்றவர் என்பதனை நாம் உணரலாம்.

விநாயகர் திருவுருவ விளக்கம்

விநாயகர் திருவுத்தின் அமைப்பு யானை முகம், ஒடிந்த சொம்பு, பருத்த தொந்தி, இடது கையில் மோதகம், மூஷிக வாஹனம்.

பரம்பொருளாம் இறைவனிடமிருந்து முதன் முதலில் உண்டாகிய படைப்பு ஓம் என்னும் பிரணவ நாதமேயாகும். அந்த ஓம் என்னும் ஒலியின் வரிவடிவமே விநாயகரின் திரு வுருவம். இறைவனிடமிருந்து முதற்கண் தோன்றியது ஓங்காரப் பிரணவமே யாகையால் இவர் "பிரணவ கணபதி" யென்றும் "ஓங்கார வடிவினன்" என்றும் பரமசிவனது மூத்த பிள்ளை யென்றும் அழைக்கப்பெறுகின்றார்.

யானையின் குரலொலி உலகில் உண்டாகும் மற்ற எல்லா ஒலிகளைக் காட்டிலும் ஓங்காரப் பிரணவ ஒலியை நன்கு ஒலிப்பதால் யானைமுகம் இவருக்கு அமைக்கப் பெற்றது.

பிரணவ ஒலி எல்லாவற்றிற்கும் முதலாவதாக விளங்கு கின்ற தாகையால் எல்லா வழிபாடுகளிலும் விநாயகர் வழி பாடு முதலாவதாக மேற்கொள்ளப் பெறுகின்றது.

அவர் தம் பேழைவயிறு ஓங்காரத்துள் எல்லா அண்டங் களும் அடக்கம் என்பதை விளக்குகின்றது. மோதகம் அல்லது அமிர்தகலசம் அவரிடமுள்ள அழிவற்ற தன்மை, உண்மை, அறிவு, ஆனந்தம் முதலிய கலியாண குணங்களைக் காட்டுகின்றன.

விநகயகர் ஓங்கார வடிவினன் என்றபோது அண்டாண்டங் களையும் தனதுட்கொண்ட பிரம்மாண்ட வடிவினன் என்பது புலனாகின்றது. அவருடைய ஊர்தி மூஞ்சூறு என்றபோது

மூஞ்சூறு தாங்கத்தக்க சிற்றுருவினன் என்பதும் விளங்கு கின்றது. எனவே, முழுமுதற் கடவுள் அணுவுக்கணுவாயும் அப்பாலுக்கப்பாலுமாய் விளங்குகின்ருர் என்பதை விநாயகர் உருவம் அறிவிக்கின்றது.

ஔவையார் :

விநாயகரை வழிபட்டு உய்ந்த பெரியோர்கள் பற்பலருள் ஔவைப் பிராட்டியாரும் ஒருவராவர். ஔவைப் பிராட்டியை அறியாதவர் தமிழ் நாட்டில் எவரும் இரார். இளஞ் சிறுவர்கள் பயின்று பயனடையும் பெருட்டு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்னும் சிறந்த நீதி நூல்களை அருளிச் செய்தவர் ஔவையாரே ஆவர் என் பதனை அனைவரும் அறிவர். பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் ஆகிய நாலும் கலந்து தந்து, ' சங்கத் சமிழ் மூன்றும் தா ' என்று விநாயகரை வேண்டி வழிபட்டுப் பெரும் புலமை பெற்றவர் ஔவையார்! விநாயகரை வழி பட்டால், நமக்கு வாக்கு வன்மை யுண்டாகும் ; நல்ல மனம் உண்டாகும் ; திரு மகளின் அருட்பார்வை நம்மீது படிந்து, நமக்குச் செல்வங் கள் பலவும் பெருகும் ; நம் உடம்பிற்கு எத்தகைய நோயும் நேராது என்று, ஔவையுரர் உறுதியாகக் கூறி, நமக்கெல் லாம் அறிவுறுத்தியுள்ளார்.

அத்தகைய ஒவைப்பிராட்டியார் அருளிச் செய்த நூலே ' விநாயகர் அகவல் ' என்பது. விநாயகரைப் பற்றிய துதி

நூல்கள் பலவற்றுள், 'விநாயகர் அகவல்' என்பது, மிகவும் எளியதும் இனியதும் சிறியதும் ஆகும். அளவாற் சிறியது ஆயினும், பொருளால் மிகவும் பெரியது; யோக ஞான அனுபவக் கருத்துக்கள் பல பொதிந்து விளங்குவது, இந்தச் சிறந்த துதிநூல்! ஔவையார் இதனைப் பாடியருளியது பற்றி, ஒரு வரலாறும் கூறப் படுகின்றது.

வரலாறு :

ஔவையார் ஒரு சமயம் வழக்கம்போல் விநாயகரை வழிபட்டுக்கொண்டிருந்தார். அதுபோது சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானையின் மீதும், சேரமான் பெருமாள் வெண்புரவியின் மீதும், ஏறித் திருக்கயிலை சென்று கொண்டிருத்தலை, அவர் அறிந்தார். தாமும் அவர்களுடன் திருக் கயிலைக்குச் செல்லுதல் வேண்டும் என்று விரும்பினர்.

தமது வழி பாட்டின் நிறைவில், விநாயகரை நோக்கி, இவ்வகவலைப் பாடினர். விநாயகர் இவ்வகவலைக்கேட்டு மிகவும் மகிழ்ந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரமான் பெருமாள் நாயனரும் சென்று சேர்தற்கு முன்னரே, ஔவையாரைத் திருக்கயிலையில் தமது துதிக் கையினுற் சேர்ப்பித்தார். தமக்கு முன்னே ஔவையார் கயிலைக்கு வந்து சேர்ந்திருத்தலைக் கண்ட சேரமான் பெருமாள்

மிகவும் வியப்புற்று, அவர் அங்குத் தமக்கு முன்னரே வந்து சேர்ந்தது எங்ஙனம் ? என அதிசயித்து வினவினர். அப்போது ஔவையார்,

மதுர மொழிநல் உமையாள்
புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினைய வல்லார்க்கு
அரிதோ ? முகில்போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையும்,
தேரும், அதன் பின் வரும்
குதிரையும் காதம், கிழவியும்
காதம் ; குலமன்னனே.

என்னும் பாடலை அருளிச் செய்து, விநாயகரின் அருளால் தாம் அவர்களுக்கு முன்னரே கயிலைக்கு வர முடிந்ததனைக் கூறி மகிழ்வித்தார் என்பது, விநாயகர் அகவல் பற்றிய வரலாறு.

விநாயகர் அகவல்

(பொழிப்புரை)

(1—2) குளிர்ச்சி பொருந்திய, நறுமணம் கமழ்கின்ற, செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில் உள்ள சிலம்புகள், பல வகை இனிய இசைகளைப் பாடவும் ;

(3—4) பொன்னுற் செய்த அரைஞாணும், பூவேலைப்பாடுகள் அமைந்த துகில் ஆகிய துணியும், அழகிய இடுப்பில் விளங்கி அழகு வீசவும் ;

(5—8) பெரிய வயிறும், பெரிய உறுதியான தந்தமும், யானை முகமும், விளங்குகின்ற சிவப்புப் பொட்டும்; ஐந்து திருக்கைகளும், அவற்றுள் ஒன்றில் அங்குசம் என்னும் படையும், மற்றொன்றில் பாசக் கயிறும், மிடற்றின் கண் தங்கி நீங்காதிருக்கின்ற நீல நிறத்தின் மினுமினுப்பும்,

(9—12) தொங்கிய வாய் ஆகிய துதிக்கையும், நான்கு பெரிய தோள்களும், மூன்று கண்களும், மும்மதங்களும் பெருகி நிற்றலால் ஏற்பட்ட தழும்புகளும், இரண்டு முறம் போன்ற காதுகளும், ஒளிவிடுகின்ற மணிமுடியும், திரட்சியான முந்நூல் அணிந்து விளங்குகின்ற ஒளிமிக்க மார்பும் கொண்டு,

(13—14) சொல்லின் அளவுக்கு அப்பாற் பட்ட மேலான மெய்யுணர்வின் வடிவில், அற்புதமாக நிலைபெற்ற, கற்பக மரம் போலும் வள்ளன்மை உடைய, விநாயகராகிய யானையே !

(15—17) வாழை, பலா, மா என்னும் முக்கனிகளையும் உண்ணுகின்றவரே ! பெருச்சாளியை ஊர்தியாகக் கொண்டவரே ! இப்பிறப்பில் எளிய என்னை அடிமையாகச் செய்து கொள்ள விரும்பி, தாயைப் போன்ற கருணையுடன் என் பொருட்டு எழுந்தருளி வந்து,

உ

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும், பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்,
பேழை வயிறும், பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்,
அஞ்சு கரமும், அங்குச பாசமும்,
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்,
நான்ற வாயும் நால்இரும் * புயமும்;
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்,
இரண்டு செவியும், இலங்குபொன் முடியும்,
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற † கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூடிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான்எழுந்து அருளி

---

* 'நாலிரு புயமும்' என்றும் பாடம் வழங்கும்.
† 'அற்புதன் ஈன்ற' எனவும் பாடம் உண்டு.

(18—22) அழியாமல் வளர்ந்துகொண்டு இருக்கும் பிறவிகளுக்குக் காரணமான அறியாமையைப் போக்கி, திருத்தமாக அமைந்தனவும் முதன்மை வாய்ந்தனவும் ஆகிய திருஐந்தெழுத்தின் பொருள்கள் எல்லாம் தெளிவாக என்னிடம் அமையும்படி, குருவின் வடிவத்தை மேற்கொண்டு இந்நிலவுலகத்தில் தம்முடைய திருப்பாதங்கள் பதியும்படி வந்து,

(23—24) பொருளின் தன்மை இது, மெய்ப் பொருள் இது என்று, யான் பிறப்பு இறப்புக்களால் வருந்தி இளைக்காதபடி எனக்கு மகிழ்ச்சியுடன் அருளிச் செய்து, வளைகின்ற படைக்கலம் போன்ற தமது கண்ணின் பார்வையினால் கொடிய சஞ்சித வினைகளைப் போக்கி,

(25—26) உவட்டுதல் இல்லாத இனிய உபதேசத்தினை என் செவியில் புகும்படி செய்து, தெவிட்டுதல் இன்றி மேன்மேல் இனிக்கின்ற ஞானத்தின் தெளிவையும் காண்பித்து,

(27—28) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து பொறி அறிவுகளையும் அடக்கும் நெறிமுறைகளை, இன்பத்தை மிகுவிக்கின்றன தமது கருணையினால் இனிதாக எனக்கு அறிவித்து,

(29) தத்துவங்கள் ஆகிய கருவிகள் ஒடுங்குவதற்குறிய நுண்பொருட் கருத்துக்களை உணரும்படி செய்து,

(30) பிராரத்தம் ஆகாமியம் என்னும் இரண்டு வினைகளையும் நீக்கி, மாயை ஆகிய இருளை விலக்கி,

(31) மந்தம், மந்ததரம்; தீவிரம் தீவிர தரம் என்னும் நான்கு வகையான சத்திநிபாத நிலைகளை உண்டாக்கி, அவற்றில் யான் நிற்கும் வண்ணம் எனக்கு அருளைச் செய்து,

(32) மும்மலங்களுள் ஒன்றாய் அறியாமைக்குக் காரணமான ஆணவ மலத்தை வேருடன் அறுத்து,

(33—34) ஒன்பது வாயில்களை உடைய உடலாகிய ஒப்பற்ற வீட்டின்கண் உள்ள ஐம்புலன்களாகிய கதவுகளை மூடிச் சாத்துகின்ற வழிகளையும் காண்பித்து,

மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே,
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளம்தனில் புகுந்து
குருவடிவு ஆகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது * பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையில் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுக்கும் கருத்தினை அறிவித்து,
இருவினை தன்னை அறுத்துஇருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்துஎனக் கருளி,
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி

---

* 'திரம்இது பொருள்' என்றும் பாடம் கொள்வர்.
'ஸ்திரம் என்னும் வடசொல் 'திரம்' என வந்தது என்பர்.

(35--37) மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களில் பொருந்துகின்ற நிலைகளிலும், பெறுதற்கரிய பேருக நிலைக்கும்படி செய்து, பேசும் தன்மையை நீக்கி மௌன நிலையை வருவித்து, இடை பிங்கலை என்ற நாடிகளின் இயல்புகளையும் இவற்றிற்குறிய சம்-அம்-வங்-சிங் என்னும் மந்திர எழுத்துக்களையும் அறியும்படி செய்து,

(38) இடை பிங்கலைகளில் உலவும் பிராண வாயுவினைச் சுழுமுனை நாடியின் இறுதியிற் செலுத்தும் வழிகளையும், அச் சுழுமுனை நாடி ஆறு ஆதாரகங்ளின் வழியே, மேல்நோக்கித் தலைக்குச் செல்லும் முறையையும், அவ்வாறு அங்கங்கே நிகழும் அனுபவங்களையும் ஆற்றல்களையும் தெரிவித்து,

(39) அக்கினி சூரியன் சந்திரன் என்னும் மூன்று மண்டலங்களிலும் ஊடுருவிக்கொண்டு செல்லும் சுழுமுனை நாடியாகிய தூணின்கண்,

(40) தொங்கிக் கொண்டிருந்து எழுகின்ற குண்டலினி சக்தி ஆகிய பாம்பை மூலாதாரத்தினின்று துயில்நீங்கி எழும்படி செய்து,

(41—42) அக் குண்டலியினிடத்தில் கூடியிருக்கும் அசபை என்னும் மந்திரத்தின் பொருளைத் தெளிவாக விளக்கிச் சொல்லி,

(43—44(மூலாதாரமாகிய அக்கினி மண்டலத்தில் சுழித்து எழுகின்ற நெருப்புப் போன்ற குண்டலினி சக்தியை மூச்சுக் காற்றினுல் எழுப்புகின்ற வழியை அறிவித்து,

(45—47) அமுதம் ஊற்றெடுக்கும் சகஸ்ராரம் என்னும் நிலையினையும், சூரிய கலையாகிய பிங்கலை இயங்கும் இருதயப் பகுதியினையும், சந்திர கலையாகிய இடைகலை உயிர்ப்பின் தன்மையையும், இவற்றிற்கு நடுவேயுள்ள சுழுமுனை நாடியினது பதினுலு படி நிலைகளையும்,

ஆருதாரத்து அங்குஇசை * நிலையும்
பேரு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே,
இடைபிங் கலையின் எழுத்து அறிவித்துக்,
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி,
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்

* 'அங்குச நிலையும்' என்றும் பாடம் உண்டு.

(48—50) உடலாகிய இயந்திரத்தின், பல்வேறு உறுப்புக் களின் நிலைமையையும் உணரச் செய்து பிரணவத்தோடு கூட்டி, ஆறெழுத்தும் நான்கெழுத்துமாகச் சொல்லப்படும் தூலம் சூக்குமம் என்னும் திருவைந்தெழுத்துக்களை எண்ணிச் செபிக்கும் வகையில் இனிதாக எனக்கு அருளிச் செய்து,

(51—52) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் மனம் புத்தி அகங் காரம் என்னும் எட்டாலும் அமைந்த நுண்ணுடல் புலப்படும் படி, அதன் எட்டு நிலைகளும் எனக்குக் காட்சிப்படுமாறு செய்து,

(53) மனத்தினால் சகஸ்ராரம் என்னும் சக்கரத்தின் வாயிலைக் காணுமாறு செய்து,

(54) மேலான யோகநிலையில் இருக்குமாறு வைத்து தத்துவக் கூட்டங்களினின்று நீங்குதலை இனிதாக எனக்கு அருள் புரிந்து,

(55—56) உயிரின் நிலையை உணர்த்தி, என்னை அருளால் தூய்மை செய்து, முன்னை வினையாகிய மூல கன்மத்தையும், அதன் முதலாகிய ஆணவ மலத்தினையும், அதன் வாதனை யையும் தோன்றாதபடி நீக்கி ஒழித்து,

(57—58 சொற்களும் எண்ணங்களும் இல்லாமல் நீங்கிய மன ஒருமிப்பு நிலையில் எல்லாத் தத்துவங்களையும் ஒடுக்கி, காமம் வெகுளி மயக்கங்களாகிய அழுக்குகளைப் போக்கி, எனது உள்ளத்தைத் தெளிவு அடையச் செய்து,

(60—61) என்னுடைய பக்குவ நிலையில் முடிவு இல்லாத பேரின்பமாகிய துரியாதீத ஆனந்தத்தைக் கொடுத்து,

உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக்கு அருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,
கருத்தினில் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிது எனக் கருளி,
என்னை அறிவித்து, எனக்கருள் செய்து,
முன்னை வினையின் முதலைக் களைந்தே,
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து,
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தி என்
[செவியில்*
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து,

---

* 'செவ்வியில்' (பஃகுவத்தில்) என்பது, இடைக் குறையாகச் 'செவியில்' என வந்தது.

(62) அந்நிலையினின்று மலங்களால் மறுபடியும் உலகியலில் மிகுதலாகிய துன்பத்தை ஒழித்து, அருள்வழியைக் காட்டி,

(63—66) ஓசையாகிய புற உலகத்தில் சதாசிவத்தினையும், மனமாகிய அக உலகத்தில் சிவலிங்கத்தையும், காணும்படி செய்து, சிறியவற்றிற் சிறியுதாகவும் பெறியவற்றிற் பெரிய தாகவும், கணுக்கள் முதிர்ச்சி பெற்ற கரும்பின் உள்ளேயுள்ள சுவையாகவும், பரம்பொருள் இருத்தலை எனக்குக் காண் பித்து,

(67—70) சிவவேடமும் திருநீறும் என்பால் விளங்கும்படி நிலைபெறச் செய்து, உண்மை பொருந்திய அடியவர் திருக் கூட்டத்துடன் சேர வைத்து, திருவைந்தெழுத்தின் அரிய பொருளை என்மன உணர்வில் நிலைக்கும்படி உபதேசித்து,

(71—72) உண்மை நிலையை எனக்கு அளித்தருளி, என்னை ஆண்டு கொண்ட பேறாற்றல் மிக்க விநாயகப் பெருமானே! மணம் கமழ்கின்ற நின் திருவடிகளே எனக்குப் புகலிடம்.

அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்,
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி,
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு
[அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புஉள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சுஅக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(அருஞ்சொற் பொருள்கள்)

1. சீதம்-குளிர்ச்சி. களபம்-நறுமணம்.
2. துகில்-துணி.
4. வன்னம்-அழகு, மருங்கு-இடுப்பு வளர்ந்து-தங்கி, பொருந்தி. எறிதல்-வீசுதல்.
5. பேழை-பெரிய பெட்டி பேன்ற. பாரம்-சுமை. கோடு-தந்தம்.
6: வேழம்-யானே. சிந்தூரம்-சிவப்பு, திலகம்.
7. அஞ்சு கரம்-ஐந்து கைகள். அங்குசம்-யானேயை அடக்கும் கருவி, தோட்டி. பாசம்-கயிறு.
8. நெஞ்சு-மிடறு, கழுத்து.
9. நான்ற-தொங்கிய. இரும்-பெரிய. புயம்-தோள்.
10. மும்மதம்-இச்சை ஞானம் கிரியை என்னும் ஆற்றல்கள். சுவடு-தழும்பு
13. சொற்பதம்-சொல்லின் அளவு. துரிய-மேலான. அற்புதம்-வியப்பு.
15. மூடிகம்-பெருச்சாளி.
18. மாயாப் பிறவி-அழியாத பிறவி, மாயையினுல் ஆகிய பிறவி, மயக்கம்-அறியாமை.
19. திருந்திய முதல்-சிகார வகாரங்களாகிய முதல்.
21. குவலயம்-உலகம்.
22. திறம்-பொருட்பெற்றி, பொருளின் தன்மை.
23. வாடா வகை-வருந்தாதபடி.
24. கோடாயுதம்-வளேதலாகிய கருவி, சுழல விழித்தலாகிய திருநோக்கம், அருட்பார்வை. கோடுதல்-வளேத்தல், 'கோடு ஆயுதம்' என்பது தந்தத்தைக் குறிப்பின் 'கோட்டாயுதம்' என வந்திருக்கும். கொடுவினே-கொடிய சஞ்சித வினே.

25. உவட்டா-வெளிவிடாத.

26. தெவிட்டா-சுவை குறையாத, வெறுப்பு விளேவியாத.

29. கருவிகள்-தத்துவங்கள்.

30. இருவினை-பிராரத்தம், ஆகாமியம் என்னும் வினைகள்; சிலர் நல்வினை தீவினை எனவும் கூறுவர்.

31. தலம் ஒரு நான்கு-மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என்னும் சத்திநிபாத நிலைகள்; சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் என்னும் அவத்தை நிலைகளையும் சிலர் கொள்வர். சாலோகம். சாரூபம், சாமீபம், சாயுச்சியம் என்னும் நான்கு வகை முத்திகளையும் சிலர் குறிப்பிடுவர்.

32. 'மலம் ஒரு மூன்றின் மயக்கம்' என்பதை, 'மலம் மூன்றில் ஒன்றன் மயக்கம்' எனப் பொருள் கொள்க. அதாவது, ஆணவ மலத்தால் விளையும் அறியாமை.

33. மந்திரம்-இல்லம், வீடு. உடல் ஒன்பது துளைகளையுடையது. ஆதலின் அதனை, ஒன்பது வாயில் ஒரு மந்திரம் என்று குறித்தார்.

36. பேரு-பெறுதற்கரிய செல்வமாக. பேச்சு-வைகரி மத்திமை வாக்குகள். உரை-பைசந்தி சூக்குமை வாக்குகள்.

37. இடைகலை-இடப்பக்க மூக்கின் உயிர்ப்பு.

38. கடையிற் சுழுமுனை-சுழுமுனைக் கடையில். கபாலம்-தலை.

39. மூன்று மண்டலம்-சூரியன் சந்திரன் அக்கினி. முட்டிய தூணின்-ஊடுருவிச் செல்லும் சுழுமுனையில்.

40. நான்று-தொங்கி, பாம்பு-குண்டலினி சத்தி, நாவில்-மூலாதாரத்தின் முகப்பில்.

41. அசபை-'அசபா' என்னும் ஒரு மந்திரம்.

44. கால்-காற்று, உயிர்ப்பு,

45. அமுத நிலை-தலையில் அமுதம் நிலை பெற்றுள்ள இடம். ஆதித்தன் இயக்கம்-சூரிய கலையாகிய பிங்கலை மூச்சு.

46. குமுத சகாயன்-சந்திரன்.

47. இடைச் சக்கரம்-பிரசாத மந்திரம்.

48. உடற் சக்கரம்-உடலாகிய இயந்திரம்.

49. தூலம் - பருமை. சூக்குமம் - நுண்மை, திருவைந்தெழுத்து.

50. எண்முகம் ஆக-எளிதாக.

52. புரியட்ட காயம்-சூக்குமதேகம், நுண்ணுடம்பு.

53. கபால வாயில்-சகஸ்ராரம்.

54. இருத்தி-சித்திகள். முத்தி-வீடு பேறு.

59. இருள்-சுட்டறிவு. வெளி-சுட்டிறந்த வியாபக உணர்வு

60. செவ்வியில்-பக்குவத்தில்.

71. தத்துவ நிலை-உண்மை நிலை.

72. வித்தகன்-ஞான வடிவினன், பேராற்றல் மிக்கவன். விரை கழல்-மணம் கமழ்கின்ற திருவடி. சரண்-அடைக்கலம்.

—:0:—

9. திருவருள்திரு. கந்தசாமி சுவாமிகள்
(திருவண்ணாமலை ஸ்ரீ ஈசான்ய மடம்)

10. ,, சிவஞான பாலய சுவாமிகள்
(மயிலம் பொம்மபுரம் ஆதீனம்)

11. ,, சாந்தலிங்க ராமசாமி அடிகள்
(ஸ்ரீமத் சாந்தலிங்கர் மடம், பேரூர்)

12. ,, சுந்தர சுவாமிகள்
(ஸ்ரீ சிரவணபுரம் கௌமாரமடம், கோவை-6).

தலைவர் :

1. திருவருள் திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிகபரமாசாரிய சுவாமிகள்
(தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி)

துணைத்தலைவர் :

2. உயர்திரு கே. எஸ். நரசிம்மன், பி.ஏ. பி.எல்., ஐ.ஏ.எஸ்.
(ஆணையர். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை)

செயலாளர் :

3. திரு. அ. நாராயணசுவாமி, பி.ஏ.
(உதவி ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை)

தொலைபேசி எண் : 76828

"அஞ்சல் வழி இந்து சமயப்பாட திட்டம்"
தொடங்க இருக்கிறது. விவரம் வேண்டு
வோர் செயலாளர், தமிழ்நாடு
தெய்விகப் பேரவை, ஆள்வார்
பேட்டை, சென்னை 18,
என்ற முகவரியில்
பெற்றுக்
கொள்ள
லாம்.

*

பேரவை அச்சகம், சென்னை-18,